**B 914** **BTA 2**

B.Ed. DEGREE EXAMINATION, MAY 2012

(For the candidates admitted in the academic year 2008–2009)

Optional Subject — TAMIL — Paper II

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் அரைப்பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிக்கு 2 மதிப்பெண்கள்.

1. கலைத்திட்டம் அமைக்கும் போது கவனிக்க வேண்டியவை யாவை?

2. ஆகுபெயரை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. வேற்றுநிலைக் கொள்கை என்றால் என்ன?

4. காலம் காட்டும் இடைநிலைகள் யாவை? சான்று தருக.

5. ஒலியன் என்றால் என்ன? சான்று தருக.

6. மொழி கற்றலில் கணினியின் பயன்பாடுகள் யாவை?

7. அழ. வள்ளியப்பா – குறிப்பு வரைக.

8. பரிமேலழகரின் உரைச்சிறப்பு யாது?

9. நாடக இலக்கியத்தின் வகைகள் யாவை?

10. மக்கள் தொடர்பு சாதனங்களை வகைப்படுத்துக.

11. வல்லினம் மிகும் இடங்களை இரு உதாரணத்துடன் எழுதுக.

12. பேச்சு மொழி, எழுத்து மொழி – வேறுபடுத்துக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் ஒரு பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிக்கு 5 மதிப்பெண்கள்.

13. தேசியக் கல்விக் கொள்கையின் பரிந்துரைகள் யாவை?

14. தமிழ் ஆட்சிமொழியாவதில் ஏற்படும் சிக்கல்களையும், நீக்கும் வழிமுறைகளையும் விளக்குக.

15. மொழியும் சமூகச் சூழ்நிலையும் எவ்வாறு இணைந்துள்ளது?

16. மாணவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வழிமுறைகள் யாவை?

17. முத்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம் என்பதனைக் காரணங்களுடன் நிறுவுக.

18. நாட்டுப்புற இலக்கியங்கள் இன்றும் நிலை பெற்றிருப்பதன் காரணங்கள் யாவை?

19. கற்பனை என்றால் என்ன? வகைகளை விளக்குக.

20. பெண்கள் முன்னேற்றத்திற்கான செயல் திட்டங்கள் யாவை?

பகுதி இ — ($2 \times 15 = 30$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

ஒவ்வொரு விடையும் மூன்று பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிக்கு 15 மதிப்பெண்கள்.

21. (அ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கலைச் சொற்களை உருவாக்கும் பொழுது மனதில்கொள்ள வேண்டிய செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாவல் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வரைக.

22. (அ) மொழிதோற்றக் கொள்கைகள் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சார்பெழுத்துக்களின் வகைகளைப் பற்றி விளக்கம் தருக.

———————